(6) அறிக்கை அளித்தல்.

பொதுக்கணக்காய்வுக் குழுவின் பரிந்துரைகளின் மேல் அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்த அறிக்கை.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Mr. Speaker, I rise to present the Report of the Committee on Public Accounts on the action taken by the Government on the recommendations contained in its earlier reports.

(7) அரசினர் சட்ட முன்வடிவு

தமிழ்நாடு 1974-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, தமிழ்நாடு 1974-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அறிமுகம் செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச்சட்ட முன் வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(8) 1974–75-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

4. நிதிக் கோரிக்கை எண் 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழி கிறேன் :

"நிதிக் கோரிக்கை எண் 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ரூ. 28,88,71,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."